**கலைக்காக ஒன்று சேர்தல்**

1980கள் சிங்கப்பூரின் பண்பாட்டியல் காட்சியில் ஒரு புதிய விரைவியக்கத்தைக் கண்டன, ஓவியர்கள் தங்களது சொந்தப் பலதுறை நிகழ்வுகளை அதிகளவில் ஏற்பாடு செய்தனர். 1982 ஆம் ஆண்டில், சிங்கப்பூர்க் கலை விழா, பெருநிறுவன ஆதரவை ஒருங்கிணைப்பதிலும், சர்வதேசத் தயாரிப்புகளை உள்ளடக்குவதிலும் முக்கியப் பங்கு வகித்தது. 1980களின் பிற்பகுதியில், அதிகமான ஓவியப் பயிற்சி மேற்கொள்பவர்கள் தங்கள் வழக்கமான வேலைகளை விட்டு வெளியேறியதாலோ அல்லது வெளிநாடுகளிலிருந்து திரும்பியதாலோ, ஓவியர்கள் கலைக்கும் குடிமைச் சமூகத்திற்கும் இடையிலான உறவை ஆழப்படுத்த முயன்றனர்.

இவ்விழாவினாலும் நாடகக் குழுக்களுடனான முந்தைய அனுபவங்களாலும் ஈர்க்கப்பட்ட கில்ஸ் மாசோட் (Gilles Massot), யின் யாங் விழா (Yin Yang Festival) (1987) மற்றும் கலைத் தளபதிகள் (Art Commandos) (1988) போன்ற பொது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தார். இந்நிகழ்வுகள் இலக்கியம், ஓவியம், நடனம், நிகழ்த்துகலை மற்றும் இசை ஆகியவற்றில் பயிற்சி மேற்கொள்பவர்களை ஒன்றிணைத்தன. 1988 ஆம் ஆண்டில், டாங் டா வூ (Tang Da Wu) செம்பவாங்கில் ஓர் ஓவியர்க் குடியிருப்பை நிறுவினார், இது பின்னர் ஓவியர்கள் கிராமமாக மாறியது. சிங்கப்பூரில் நிலவும் பன்முகப் பண்பாடு மற்றும் பன்முக இனக் கருத்துகளை ஆராயும் நிறுவல்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பிற கால அடிப்படையிலான நிகழ்வுகளைக்

கொண்ட ஒரு கண்காட்சியான திரிமூர்த்தியை (1988) ஏற்பாடு செய்வதற்காக நன்யாங் நுண்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஓவிய மாணவர்களின் மற்றொரு குழு சிங்கப்பூர் கோதே-கழகத்தில் (Goethe-Institut) ஒன்றுகூடியது.

| |
|---|
| கில்ஸ் மாசோட் (Gilles Massot)<br>(பிறப்பு 1955, பிரான்ஸ்)<br>'யின் யாங், ஒன் மற்றும் மெனி' (Yin Yang One and Many)<br>1987<br>கித்தான் மற்றும் செய்தித்தாளில் அக்ரிலிக் மற்றும் கோவாச் (gouache)<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு<br>2021-00507<br><br>'யின் யாங், ஒன் அண்ட் மெனி' (Yin Yang One and Many) என்பது இரட்டைப்-பக்க உருவப்படம் மற்றும் படத்தொகுப்பு ஆகும். இத்தலைப்பு, தன்னகத்துக்கும் சமூகத்திற்கும் இடையிலான கொடுக்கல் வாங்கலே வாழ்க்கை என்ற, பிரான்சில் பிறந்த சிங்கப்பூர் ஓவியர் கில்ஸ் மாசோட்டின் (Gilles Massot) பார்வையைப் பிரதிபலிக்கிறது. 1981 ஆம் ஆண்டு மாசோட் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்தார். 1987 ஆம் ஆண்டில், அவரும் ஓவியர் சைமன் வோங்கும் (Simon Wong), பின்னாளில் ஓவியரான வின்செண்ட் லியோவ் (Vincent Leow) உள்ளிட்ட மாணவத் தன்னார்வலர்களுடன் சேர்ந்து, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கெண்ட் ரிட்ஜ் கழக வளாகத்தில் (Kent Ridge Guild House) 'யின் யாங் விழாவைத்' (Yin Yang Festival) தொடங்கினர். இடப்புறத்தில் உள்ள தனி உருவம் அவரது வாழ்க்கைத் துணையரின் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டது. |
| "லாசேலில் (LASALLE) எனது இரண்டாம் ஆண்டில், நான் கலைத் தளபதிகள் (Art Commandos) முகாமில் சேர்ந்தேன், அங்கு எனக்கு கில்ஸ் [மாசோட்], வின்செண்ட் லியோவ் (Vincent Leow), நோரென்ஷா சஹாரி (Norensha Sahari) மற்றும் கோர்டன் (Gordon) ஆகியோர் வழிகாட்டினர்… ஒரு மாணவனாக, இம்முகாம் பல்வேறு கலை வடிவங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து ஆய்வு முயற்சிகள் மூலம் புதிய கலைப்படைப்புகளை உருவாக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு உதவியது. கலைத் தளபதிகள் (Art Commandos) எனக்கு நிகழ்த்துகலை மற்றும் காட்சிக் கலை அனுபவங்களை [நிறுவல்கள் உட்பட] வழங்கியது."<br>அஹ்மத் அபு பக்கர், 2025.<br><br>கலைத் தளபதிகள் (Art Commandos) மற்றும் ஓவியர்கள் கிராமத்தின் (The Artists Village) முன்னாள் உறுப்பினரான அஹ்மத் அபு பக்கர், |

**SG3**

| |
|---|
| டாஸ்மேனியாவில் தனது படிப்பைத் தொடர்வதற்கு முன்பு தொடக்கக்கால அரும்பொருளக நிரல்திட்டங்களுக்குப் பங்களித்தார். பல்வேறு நிறுவனங்களில் கற்பிக்கும் போது, அவர் தனது நிறுவல்களில் வடிவியல் மற்றும் சுருக்க வடிவங்களைத் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகிறார். |
| நான், ஓவியர்கள் கிராமத்தில் (தி ஆர்டிஸ்ட் வில்லேஜ்) கலையையும் மற்ற அனைத்தையும் பற்றிய நிறைவானதும் எண்ணத்தைத் தூண்டியதுமான உரையாடல்களுக்குச் செலவிட்ட நேரம் பற்றி நினைத்துப்பார்க்கிறேன். பேருந்து நிறுத்தத்திலிருந்து 61-B லோரோங் காம்பாஸ் (Lorong Gambas) வரை நீண்ட நடைப்பயணம் மேற்கொண்ட போதிலும், இயற்கை, ஓவியம் மற்றும் ஓவியர்களால் சூழப்பட்ட கிராம உணர்விலும் படைப்பாக்க ஆற்றலிலும் மூழ்கிட நான் எப்பொழுதும் ஆவலுடன் எதிர்பார்த்தேன், அங்குள்ள மனநிலை எப்பொழுதும் ஊக்கமளிப்பதாக இருந்தது."<br>வின்சென்ட் லியோவ் (Vincent Leow), 2025.<br><br>வின்சென்ட் லியோவ் ஓர் ஓவியர், கல்வியாளர் மற்றும் பண்பாட்டு அமைப்பாளர் ஆவார், அவரது பயிற்சி, சிற்பம், நிறுவல், நிகழ்த்துகலை மற்றும் ஓவியம் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் பரவியுள்ளது. லாசேல் கலைக் கல்லூரியில் மாணவராக இருந்தபோது, யின் யாங் விழா மற்றும் கலைத் தளபதிகள், ஓவியர்கள் கிராமம் (The Artists Village) போன்றவற்றின் உருவாக்குதல் நிகழ்வுகளில் லியோவ் தீவிரப் பங்கேற்பாளராகவும் மாணவர்த் தலைவராகவும் இருந்தார். 2007 ஆம் ஆண்டு வெனிஸ் ஈராண்டுக் கண்காட்சியில் சிங்கப்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்திய அவருக்கு 2020 ஆம் ஆண்டு கலாசாரப் பதக்கம் வழங்கப்பட்டது. |
| "நாங்கள் ஜூன் 20, 1988 அன்று 61-B லோரோங் காம்பாஸில் (Lorong Gambas) குடியேறினோம் [...] இந்தக் காட்சியியல் விஷயங்கள் அனைத்தும் எனக்கு வரைய மிகவும் களிப்பளிப்பதாக இருந்தன. எங்கள் கிராமத்திற்கு வெளியே உட்கார்ந்து என் முன்னாலுள்ள காட்சிகளை வரையலாம் அல்லது அக்கம் பக்கத்தில் அலைந்து திரிந்து அங்குள்ளவற்றை வரையலாம். இஃது எனக்கு மிகவும் புதிய உலகமாக இருந்தது, மேலும் சிங்கப்பூரில் மறைந்து வரும் இத்தகைய வாழ்க்கை முறையைப் பார்த்து அதை ஆவணப்படுத்துவது என்பது எனக்கு ஒரு பெரும்பேறாகத் தெரிந்தது.<br>ஹேசல் மெக்கின்டோஷ் (Hazel McIntosh), 2025.<br><br>ஹேசல் மெக்கின்டோஷ் (Hazel McIntosh) ஓர் ஓவியர், கோட்டுப்பட ஓவியர் மற்றும் கல்வியாளர் ஆவார், அவர் 1980களில் சிங்கப்பூருக்குச் செல்வதற்கு முன்பு ஐக்கிய இராச்சியத்தில் (United Kingdom) உள்ள புனித மார்ட்டின் (St. Martin) ஓவியப் பள்ளியில் பயிற்சி |

| |
|---|
| பெற்றார். லோரோங் காம்பாஸின் கிராமப்புறப் பகுதியில் வாழ்ந்து வந்த அவர், அதன் நிலப்பரப்பு மற்றும் சமூகத்திலிருந்து படைப்பூக்கம் பெற்றார். வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகவும் அச்சுத் தயாரிப்பாளராகவும் இருந்த மெக்கின்டோஷ், 1989 மற்றும் 1992-க்கு இடையில் நன்யாங் நுண்கலைக் கழகத்தில் கற்பித்தார். |
| டாங் டா வு (Tang Da Wu)<br>(பிறப்பு 1943, சிங்கப்பூர்)<br>'ஜஸ்ட் இன் கேஸ்' (Just in Case)<br>1991<br>மரம், உலோகம் மற்றும் மின்சார ஒளிர்வத்தி (Torch)<br>சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு<br>1993-01667<br><br>'ஜஸ்ட் இன் கேஸ்' (Just in Case) வார்த்தைகளுடனும் செய்பொருள்களுடனும் விளையாடுகிறது. "பர்மாவிலிருந்து சிங்கப்பூர் வரை" என்று குறிக்கப்பட்ட ஒரு முற்றடைப்பு செய்யப்பட்ட மரப் பெட்டி, அதன் மேல் மேற்பரப்பில் இரண்டு துளைகளுடன் அமர்ந்திருக்கிறது. ஒரு துளையின் மீது ஓர் ஒளிர்வத்தி பொருத்தப்பட்டுள்ளது. டாங் டா வூ (Tang Da Wu) பார்வையாளர்களை உள்ளே பார்க்க அழைக்கிறார். இரண்டாவது துளை வழியாக, "JUST" என்ற வார்த்தை பார்வைக்கு வருகிறது. தலைப்பு, “நீதி” மற்றும் “பெட்டியிலிட்டு மூடப்பட்டது” என சொற்பொருளின் பல அடுக்குகளைக் குறிக்கிறது, அது பார்வையாளர்களை மியான்மரின் சமூக மற்றும் அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொள்ளத் தூண்டுகிறது—அது சிங்கப்பூரில், மிகவும் சொல்படியே அமைந்த வகையில், தூரத்திலிருந்து பார்க்கப்பட்டது. |
| "திரிமூர்த்தி என்பது இந்துக் கடவுளான பிரம்மன், திருமால் மற்றும் சிவன் ஆகியோருடன் பொதுவாக தொடர்புடைய மூன்று வடிவங்களை விவரிக்கும் ஒரு சமஸ்கிருத வார்த்தையாகும். இங்கே, இயற்கையைப் போன்ற மூன்று ஆற்றல்களின் வெளிப்பாட்டை வரையறுக்க இதைப் பயன்படுத்துகிறோம்: படைப்பு, காத்தல் மற்றும் அழித்தல்."<br>திரிமூர்த்தி கண்காட்சிப் படப்பட்டியல், 1988.<br><br>1987 ஆம் ஆண்டு நன்யாங் நுண்கலைக் கழகப் பட்டதாரிக் காட்சி நிகழ்ச்சியான ஐந்நிகழ்ச்சியின் (Quintet) தொடர் காட்சியாக அரங்கேற்றப்பட்ட திரிமூர்த்தி, ஒரு வழக்கமான கலைக்கூடத்தின் பழம்முறை நிலைவுத் தன்மையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. தாவோயிஸ்ட், இந்து மற்றும் சூஃபி தத்துவங்களை வரைந்து, ஓவியர்கள் கண்காட்சி இடத்தை ஓர் உயிருள்ள, சுவாசிக்கும் சூழலாக மறுகற்பனை செய்தனர். பகுதியளவு நேரடி நிகழ்த்துகலை, |

**SG3**

பகுதியளவு நிறுவல், பகுதியளவு கண்காட்சி என, வாழ்க்கை மற்றும் மரணத்தின் அண்டச் சுழற்சியை ஆராயும் ஓவியங்கள், பொருள்கள் மற்றும் செயல்கள் மூலம் நிகழ்வு வெளிப்பட்டது.

SG3

## அவர்களுக்கென்று சொந்தமாக ஓர் இடம்

அரசாங்கம் கிராமப்புறங்களை மறுமேம்பாடு செய்ததன் காரணமாக, 1990 ஆம் ஆண்டில் லோரோங் காம்பாஸில் (Lorong Gambas), ஓவியர்கள் கிராமம் (The Artists Village) அதன் இடத்தை இழந்தது. மற்ற ஓவியர்க் குழுக்களும் அமைப்புகளும், 'தி சப்ஸ்டேஷன்' (1990–2021), 5வது கடவுவழி (5th Passage) (1991–1994) மற்றும் 'பிளாஸ்டிக் கைனடிக் வார்ம்ஸ்' (Plastique Kinetic Worms) (1998–2008) போன்ற அரை நிரந்தர இடங்களைக் கண்டறிந்தன, அவை இடைநிலை பயிற்சிமுறைகளின் மையங்களாக மாறின. பொது இடங்களில் சமூக அடிப்படையிலான பயிற்சிமுறைகளைத் தொடங்க ஓவியர்கள் இவ்விடங்களைப் பயன்படுத்தினர். 5வது கடவுவழி 'பார்க்வே பரேட்' (Parkway Parade) என்ற கடைத்தொகுதிக் கட்டடத்தினுள் இயங்கியது, அதே நேரத்தில் 'பிளாஸ்டிக் கைனடிக் வார்ம்ஸ்' (Plastique Kinetic Worms) சைனா டவுனில் (Chinatown) உள்ள பயன்படுத்தப்படாத ஒரு வரலாற்றுக் கடைவீட்டைப் பயன்படுத்தியது.

ஓவியர்கள் கிராமம் (The Artists Village), பல்வேறு பொது நிறுவனங்கள் மற்றும் ஓவியர்களால் நடத்தப்படும் இடவசதிகளுடன் இணைந்து பணியாற்றும் ஒரு கூட்டு மாதிரியை ஏற்றுக்கொண்டு, சிற்பக் கருத்தரங்கு (1991) மற்றும் ‘தி ஸ்பேஸ்’ (The Space) (1992) போன்ற தொடர்ச்சியான கலை நிகழ்வுகளை நடத்தியது. தற்போது இடிக்கப்பட்ட 'ஹாங் பீ' (Hong Bee) கிடங்கில் சிங்கப்பூர்க் கலை விழாவுடன் இணைந்து நடத்தப்பட்ட ‘தி ஸ்பேஸ்’ (The Space), வளர்ந்து வரும் ஓவியர்களுக்கு ஒரு தளத்தை வழங்கியது. தற்சிக்கல் மற்றும் பாலினச் சிக்கல்கள் குறித்த அவர்களின் கேள்விகள், 'தி சப்ஸ்டேஷனைப் (The Substation) 'புத்தளவுகோல்' (The New Criteria) என்ற வருடாந்திர கலை நிகழ்ச்சியைத் தொடங்கத் தூண்டியது.

**SG3**

| |
|---|
| லீ வென் (Lee Wen)<br>(பிறப்பு 1957, சிங்கப்பூர்; இறப்பு. 2019, சிங்கப்பூர்)<br>ஒரு மஞ்சள் மனிதனின் பயணம், எண். 11: பன்முகப் பண்பாடு<br>1997<br>காகிதத்தில் மை நுண்பாய்ச்சி (inkjet) அச்சு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>2014-01370<br><br>1992 முதல், லீ வென் (Lee Wen) உலகம் முழுவதும் "மஞ்சள் மனிதனாகத்" தோன்றினார். இக்குறிப்பிட்ட நிகழ்ச்சி 1997 ஆம் ஆண்டு 'தி சப்ஸ்டேஷனில்' (The Substation) நடந்தது, அங்கு அவர் தனது உடலில் இருந்த மஞ்சள் வண்ணப்பூச்சைக் கழுவ ஒரு குளியல் தொட்டியில் இறங்குவதற்கு முன்பு ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அவரது நிகழ்ச்சி, குறியீடாகவும் கூர்மையாகவும் இருந்தது - நிகழ்த்துகலை மற்றும் நிறுவல் கலையைத் தியாகம் செய்துவிட்டு, மை மற்றும் நீர் வண்ணத்தை அதிகமாகப் பிரதிநிதித்துவப்படுத்தியதற்காக சிங்கப்பூர் கலைவிழா '97 பற்றிய விமர்சனமாக அஃது அமைந்தது. |
| மேல் இடது<br>ஜூலியானா யாசின் (Juliana Yasin)<br>(பிறப்பு 1970, சிங்கப்பூர்; இறப்பு. 2014, சிங்கப்பூர்)<br>பட்டம் தொடர் 8<br>2000<br>காகிதத்தில் அக்ரிலிக்<br><br>மேல் வலது<br>பெஞ்சமின் புவா (Benjamin Puah)<br>(பிறப்பு 1976, சிங்கப்பூர்)<br>வின்சென்ட் தூங்கிக் கொண்டிருந்தபோது எனது கோப்பை தேநீரை அருந்துதல்<br>2000<br>காகிதத்தில் அச்சு<br><br>நடு இடது<br>யுவோன் லீ (Yvonne Lee)<br>(பிறப்பு 1972, சிங்கப்பூர்)<br><br>பெயரிடப்படாதது<br>2000 |

காகிதத்தில் மர வில்லை அச்சு

வின்சென்ட் லியோவ் (Vincent Leow)
(பிறப்பு 1961, சிங்கப்பூர்)
தாமரை
2000
காகிதத்தில் மர வில்லை அச்சு

கீழ் இடது
ஜூல்ஹார்லி அட்னான் (Zulharli Adnan)
(பிறப்பு 1977, மலேசியா)
ஜிப் கொண்டு மூடவும்
2000
காகிதத்தில் ரிசோகிராஃப் (Risograph)

கீழ் வலது
ஜைனுதீன் சம்சூரி (Zainudin Samsuri)
(பிறப்பு 1974, சிங்கப்பூர்)
இருத்தல் (Being)
2000
காகிதத்தில் மர வில்லை அச்சு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு

இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள படைப்புகள், 'பிளாஸ்டிக் கைனடிக் வோர்ம்ஸ் (PKW)' அமைப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையிலும், கூட்டுப்பணிக்கான நிதியைத் திரட்டும் வகையிலும் ஓவியர்கள் மற்றும் கூட்டுப்பணியாளர்களால் உருவாக்கப்பட்ட காகிதத்தில் உருவாக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்பான 'பெட்டியிலடப்பட்டவை': 26 × 26-இன் ஒரு பகுதியாகும். 1998 ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஓவியர்களான வின்சென்ட் லியோவ் மற்றும் யுவோன் லோ ஆகியோரால் நிறுவப்பட்ட PKW, சிங்கப்பூரில் பல நிறுவனங்கள் தம் செயல்பாடுகளை நிறுத்தியிருந்த காலக்கட்டத்தில் தோன்றிய, ஓவியர்களால் நடத்தப்படும் சில இடங்களில் ஒன்றாகும்.

ஓவியர்கள் கிராமம் (The Artists Village) மற்றும் 5வது கடவுவழி (5th Passage) ஆகிய இடவசதிகள் இனி செயல்படாததால், PKW சமகால மற்றும் ஆய்வுமுறை ஓவியங்களுக்கான ஒரு முக்கியமான தளமாக மாறியது. அடுத்து வந்த பத்தாண்டலகுகளில், இது சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்த்தது, இளைய ஓவியர்களை ஆதரித்தது மற்றும் சிங்கப்பூரின் வளர்ந்து வரும் கலைக் காட்சியில் ஈடுபட ஓவியக் காப்பாளர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஓர் இடத்தை வழங்கியது. PKW-யின் இருப்பு உள்ளூர்ப் பகுதிகளுக்கு அப்பாலும்

| |
|---|
| விரிவடைந்து, 2002 ஆம் ஆண்டு குவாங்ஜு ஈராண்டுக் கண்காட்சியில் அக்குழு பங்கேற்றது, |
| டொமினிக் ஹுய் (Dominique Hui)<br>(பிறப்பு 1972, சிங்கப்பூர்)<br>சுதந்திரதேவி சிலை<br>1992<br>காகிதம் மற்றும் செய்தித்தாளில் சீன மை மற்றும் கோவாச் (gouache)<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>1995-02054<br><br>சுதந்திர தேவி சிலை "தி ஸ்பேஸ்" இல் உருவாக்கப்பட்டது. இது முன்னாள் ஹாங் பீ (Hong Bee) கிடங்காகும், அங்கு டாங் டா வு மற்றும் ஓவியர்கள் கிராமத்து (The Artists Village) ஓவியர்கள் 1990 களின் முற்பகுதியில் தொடர்ச்சியான ஆய்வுமுறை ஓவியச் செய்பொருள்களைச் செய்தனர். இப்படைப்பு, அதே தளத்தில் காட்டப்பட்டுள்ள 'டொமினிக் ஹுய்'யின் கிராஃபிட்டியினால் (graffiti) ஈர்க்கப்பட்ட படைப்புத்தொடரில் தொடர்கிறது. தணிக்கையின் கருப்பொருள்களை ஆராய பெண் வடிவத்தின் மீது ஹுய் படத்தொகுப்பை அடுக்கினார். இப்படைப்பில், பாலினம் வேண்டுமென்றே திறந்தநிலையில் விடப்பட்டுள்ளது. ஆண், பெண் மற்றும் நடுப் பாலின உருவங்கள் அருகருகே தோன்றி, 1990களில் பாலினம் குறித்த தெளிவற்ற மற்றும் சர்ச்சைக்குரிய கருத்துகளைக் குறிக்கின்றன. அமெரிக்க பாப் சின்னயியலின் பயன்பாடு மற்றும் உடல் உருவங்களின் தயாரிப்பு ஆகியவை அக்கால மேற்கத்திய ஊடகங்களின் பரவலைப் பிரதிபலிக்கின்றன. |
| கைருல் அன்வர் சாலே (Khairul Anwar Salleh)<br>(பிறப்பு 1965, சிங்கப்பூர்)<br>3 வெப்பக்குடுவைகள் பற்றிய ஆய்வு<br>1990<br>அக்ரிலிக், மை, வண்ண குறிப்பான்கள் மற்றும் கித்தானில் பேனா<br>சிங்கப்பூர் தேசிய காட்சிக்கூடத்தின் திரட்டு<br>2020-00485<br><br>செயன்முறைப்படுத்தாத இந்த அசையாநிலைப் பொருளோவியம் இயல்பாகவும், கவனக்குறைவுடனும் உள்ளது. இருப்பினும், 1990களில் சிங்கப்பூரில் நிலவிய சமகாலக் கலையின் மனநிலைக்கு எதிரான கைருல் அன்வர் சாலேவின் குறும்புத்தனமான எதிர்வினை அவ்வோவியத்தின் மேற்பரப்புக்குக் கீழே உள்ளது. கைருல், தனது சகாக்களின் படைப்புகள் பெரும்பாலானவற்றில் பதற்றக் கனமும், உலகளாவிய சமூக அரசியல் மாற்றங்களால் ஏற்பட்ட சுமையும் இருந்ததாக உணர்ந்தார். அவரது பதில் ஒரு விளையாட்டுத்தனமான |

| |
|---|
| எதிர்ப்பை எடுத்துக்கொள்வதாகும். அலட்சியமான தூரிகைத் தடவல்களும் கண்ணுக்குப் புலப்படும் திருத்தங்களும் சுருக்க வெளிப்பாட்டியல் மற்றும் பாப் கலைக்கு ஒரு சான்றாகும். இவ்வோவியம் 1990 அக்டோபரில் 'தி சப்ஸ்டேஷனில்' கைருலின் முதல் தனிக் கண்காட்சியில் இடம்பெற்றது, பின்னர் சிற்பி ஃபைசல் ஃபாடிலின் 1991 ஆம் ஆண்டு அதே பெயரில் ஆயத்தநிலைச் சிற்பத்தை செதுக்குவதற்குப் படைப்பூக்கம் அளித்தது. |
| சுசான் விக்டர் (Suzann Victor)<br>(பிறப்பு 1959, சிங்கப்பூர்)<br>அசையாநிலைப் பொருளோவியம்<br>1992/2025<br>கத்தரிக்காய் மற்றும் உலோகக் கவ்விகள் (clips)<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தால் வரையப் பணிக்கப்பட்டது.<br><br>1992 ஆம் ஆண்டு 'பார்க்வே பரேடில்' 5வது கடவுவழி அமைப்பால் நடத்தப்பட்ட 'பாடி ஃபீல்ட்ஸ்' (Body Fields) என்ற நேரடி நிகழ்த்துகலை நிகழ்ச்சிக்காக முதலில் கருத்தியல் உருவாக்கப்பட்டது, 'அசையாநிலைப் பொருளோவியம்' (Still Life) சிங்கப்பூரில் தளம் சார்ந்த நிறுவலின் தொடக்கக்கால எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. இப்படைப்பின் மையமாக அடக்கமான கத்தரிக்காய் உள்ளது - இஃது அழுகக்கூடிய பழம், இஃது ஆண்குறியைக் குறிப்பாகப் பொருளுணர்த்தும் ஓர் அழகான சொல்லாகச் செயல்படுகிறது. உணர்வுகாட்டிச்சின்னக் (emoji) காலக்கட்டத்துக்குப் பல பத்தாண்டலகுகளுக்கு முன்பே, இக்குறிப்பு ஏற்கனவே செயல்பாட்டில் இருந்தது, அஃது ஆத்திரமூட்டும் வகையில் இருந்தது. இப்படைப்பு, சுசான் விக்டரின் பயிற்சிமுறையில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் பல மையக்கருத்துக்களை அறிமுகப்படுத்துகிறது. காலத்தின் போக்கைக் கற்பனை செய்ய, கரிமப் பொருள்களைப் பயன்படுத்துதல் மற்றும் மெதுவான, தவிர்க்க முடியாத சிதைவுச் செயல்முறையைப் பயன்படுத்துதல் போன்றவை அவை.<br><br>இப்படைப்பில் உள்ள கத்தரிக்காய்கள் மாதந்தோறும் மாற்றப்படும். பழைய கத்தரிக்காய்கள், இலாப நோக்கற்ற சமூக அமைப்பான கிரவுண்ட்-அப் இனிஷியேட்டிவ் (GUI)-க்கு, அவர்களின் சமூகப் பண்ணையில் உரம் தயாரிப்பதற்காக, நன்கொடையாக வழங்கப்படும். |

**SG3**

## துறைகளுக்கு இடையே பார்த்தறிந்து பயணித்தல்

1989 ஆம் ஆண்டு, பண்பாடு மற்றும் கலைகளுக்கான அறிவுரையாளர்கள் குழுவின் (ACCA) பரிந்துரைகளைத் தொடர்ந்து, சிங்கப்பூர், 1990களின் நடுப்பகுதியிலிருந்து அரசாங்க உள்கட்டமைப்பில் ஒரு பெரிய விரிவாக்கத்தைக் கண்டது, இது நாட்டின் பண்பாட்டுப் பரப்பின் வளர்ச்சியை ஆதரித்துச் செயல்படுத்தியது. அதே நேரத்தில், கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள், ஆங்கில இலக்கியம் மற்றும் நாடகப் படிப்புகள் போன்ற பாடங்களை பள்ளிப் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தின, இவை மாணவர்களின் கலை வெளிப்பாட்டை விரிவுபடுத்தின. இவ்வெளிப்பாடு, பின்னர் தங்கள் பயிற்சி முறையில் பிற துறைகளில் நுழைந்த ஓவியர்களுக்கு ஓர் உருவாக்குதல் அனுபவமாக மாறியது.

கற்பித்தல் கட்டமைப்புகளில் செய்யப்பட்ட இவ்விரிவாக்கம், சிங்கப்பூரில் புதிய புதிய நாடகக் குழுக்களின் நிறுவல்கள் மூலம் பிரதிபலித்தது. இக்குழுக்கள், நாடகத் தயாரிப்புகளில் திரைக்குப் பின்னால் வெவ்வேறு பணிப்பொறுப்புகளில் ஓவியர்களை முயற்சி செய்ய அனுமதித்தன. எஸ்பிளனேட் (Esplanade) நிறுவலும் அதன் பலதுறை நிரல்திட்டமும், உள்ளூர் மற்றும் சர்வதேச கலைஞர்களிடையே கலைப் பரிமாற்றத்திற்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கின. 'அத்தியாவசிய மேடை' (The Necessary Stage) என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர நேரடி நிகழ்த்துகலைகளின் விழாவான 'M1 சிங்கப்பூர் ஃப்ரிஞ்ச் விழா' (M1 Singapore Fringe Festival) போன்ற நிகழ்வுகளுடனான கூட்டுகள், பலதுறை ஆய்வுகள் மற்றும் கலைத் தூண்டல்களுக்கான தளமாக எஸ்பிளனேடைச் (Esplanade) செயல்பட வைத்தன.

**SG3**

| |
|---|
| மிங் வோங் (Ming Wong)<br>(பிறப்பு 1971, சிங்கப்பூர்)<br>புத்துயிர்ப்பு பெற்ற நான்கு மலாய்க் கதைகள்<br>2005/2025<br>காணொளி, நான்கு ஒளிவழி, கறுப்பு மற்றும் வெள்ளை நிலைப்பேழை மற்றும் LED திரைகள்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தால் வரையப் பணிக்கப்பட்டது.<br><br>'புத்துயிர்ப்பு பெற்ற நான்கு மலாய்க் கதைகள்' படைப்பில், மிங் வோங் அசல் பி. ராம்லீ திரைப்படத்தின் காணொளி வெட்டுகளை வோங்கின் நான்கு மலாய்க் கதைகளின் (2005) காட்சிகளுடன் தனிப்பயனுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட மின்னிலக்க விளைவு-வடிகட்டி மூலம் பின்னிப்பிணைக்கிறார். இதன் விளைவாக வரும் காணொளி கிடைமட்டக் கோடுகளுடன் மினுமினுக்கிறது, இது பழைய CRT தொலைக்காட்சித் திரைகளில் உள்ள குறைப்பாடுகளை ஒத்திருக்கிறது. இடைவெளிகளில், அசல் ராம்லீ படக் காட்சிகள் காணொளிக் காட்சிகளை குறுக்கிடுகின்றன அல்லது "சிதைக்கின்றன".<br><br>பி. ராம்லீயின் திரைப்படங்களையும் மலேயத் திரைப்படத்துறைக்கு அவரது பங்களிப்புகளையும் இப்போது குறைவான மக்களே நினைவில் வைத்திருப்பதால், வோங் 2025 இல் புத்துயிப்புப் பதிப்பை உருவாக்கினார். புத்துயிர்ப்பு,"அசல்" மற்றும் "மறு உருவாக்கம்/மறு பொருள்விளங்கல்" ஆகியவற்றுக்கு இடையே ஒரு நேரடி உரையாடலைத் திறக்கிறது, இது வோங்கின் மறு-உருவாக்கங்களுக்கு மையமாக இருக்கும் இடைவெளிகள், தவறுகள் மற்றும் குறைப்பாடுகளை வெளிப்படுத்துகிறது. |
| ஹோ சூன் யீன் (Ho Soon Yeen)<br>(பிறப்பு 1970, சிங்கப்பூர்)<br>தொங்கு விளக்குகள் ஒருபோதும் வெளியே போகா<br>நிகழ்ச்சி அட்டை<br>அசல் 1994, மறுஉருவாக்கம் 2025, வினைலில் மின்னிலக்க அச்சு<br>© ‘அத்தியாவசிய மேடை' (The Necessary Stage)<br>நாடகத்தின் இந்த மறு செய்கை 1994 ஆம் ஆண்டு மார்ச் 17 முதல் 19 வரை, கின்னஸ் அரங்கத்தில், தி சப்ஸ்டேஷனில் அரங்கேற்றப்பட்டது. இயக்குநர்: எல்விரா ஹோல்ம்பெர்க், நாடக ஆசிரியர்: ஹரேஷ் சர்மா தயாரிப்பு மேலாளர்: கிளாரிஸ் என்ஜி ஸ்டேஜ், மேலாளர்: சார்மைன் டான், ஒளி வடிவமைப்பு: தியோ லே ஹூன், ஒலி & இசை: ஹோசன் லியோங், சுவரொட்டி வடிவமைப்பு: ஹோ சூன் யீன்<br><br>அத்தியாவசிய மேடை' (The Necessary Stage) (1987 இல் தொடங்கப்பட்டது) என்ற இலாப நோக்கற்ற நாடக நிறுவனத்திற்காக, |

SG3

| |
|---|
| 1989 ஆம் ஆண்டு எழுதப்பட்ட, 'தொங்கு விளக்குகள் வெளியே போகா' (Lanterns Never Go Out) என்பது ஹரேஷ் சர்மாவின் முதல் நாடகமாகும். சிங்கப்பூர் எழுத்தாளர் டாக்டர் ஜெரால்டின் ஹெங்கின் கவிதையான 'சிறு பொருள்கள்' (Little Things) (1983) என்பதிலிருந்து இந்த நாடகம் அதன் தலைப்பைப் பெறுகிறது.<br><br>அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும், சிங்கப்பூரின் கல்வி முறையில் ஒரு முக்கிய மைல்கல்லான, GCE 'ஓ' நிலைத் தேர்வுகளுக்குத் தயாராகும் ஒரு பதின்ம வயதினரை மையமாகக் கொண்டது இக்கதை. அவள் உறவுகளை அறிந்து பயணித்து, சமூக மற்றும் குடும்ப எதிர்பார்ப்புகளைப் பற்றி அதிகளவில் அறிந்திருக்கையில், நாடகம் அவளது வளர்ந்து வரும் தன்னுணர்வையும், வயதுவந்தோர் குறித்த அவளது இருத்தலியல் கேள்வியையும் ஆராய்கிறது.<br><br>1994 ஆம் ஆண்டு தயாரிப்பிற்காக, ஓவியர்-கல்வியாளர் ஹோ சூன் யீன் (Ho Soon Yeen) நிகழ்ச்சியின் அட்டைப்படத்தையும் சுவரொட்டியையும் வடிவமைத்தார். 'பிராக்டிஸ் தியேட்டர் என்செம்பிள்' (Practice Theatre Ensemble) அமைப்பின் ஒரு நாயகனின் மரணம் (1995) என்ற நாடகத்தில் ஒரு நடிகராக சிங்கப்பூரின் நாடகக் களத்திற்கும் ஹோ பங்களித்தார், மற்றும் அவர் 'டிராமா பாக்ஸ்' (Drama Box) அமைப்பின் 'தி வஜினா லோக்' (vaginaLOGUE) (2003, 2008) நாடகத்திற்கான வரைகலை வடிவமைப்பை உருவாக்கினார். |
| 'தேசிய மொழி வகுப்பு' துண்டுப்பிரசுரம்<br>spell#7performance அமைப்பின் தயாரிப்பு<br>அசல் 2008, மீளுருவாக்கம் 2025, வினைலில் மின்னிலக்க அச்சு<br>© spell#7performance<br>நாடகத்தின் இந்த மறு செய்கை 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 முதல் 5 வரை எஸ்பிளனேட் - கரையோர அரங்கத்தில் உள்ள அரங்கப் படைப்பகத்தில் அரங்கேற்றப்பட்டது.<br>இயக்குநர்: பால் ரே<br>நடிகர்கள்: நூர் எஃபெண்டி இப்ராஹிம், இயோ யான் யான்<br><br>தேசிய மொழி வகுப்பு என்ற தலைப்பு, 1959 ஆம் ஆண்டு சுவா மியா டீ வரைந்த அதே பெயரில் உள்ள ஓவியத்திலிருந்து பெறப்பட்டது. அவ்வோவியம் ஒரு மலாய் ஆசிரியர் சீன மாணவர்கள் குழுவிற்கு மலாய் மொழியைக் கற்பிப்பதைச் சித்தரிக்கிறது. இந்நாடகம் முதன்முதலில் நடிகர்-ஓவியர்-கல்வியாளர் நூர் எஃபெண்டி இப்ராஹிம் (Noor Effendy Ibrahim) என்பவரால் 2005 ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சி மற்றும் நிறுவலாக கருத்தாக்கம் செய்யப்பட்டது, பின்னர் ஒரு புதிய தேசிய அடையாளம் மற்றும் மொழியை உருவாக்குவது குறித்த கவலைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், spell#7performance மூலம் ஒரு நாடகமாக உருவாக்கப்பட்டது. இந்நாடகம் ஓவியத்தின் |

**SG3**

காட்சியை மீண்டும் உருவாக்குகிறது, ஆசிரியர், மாணவர்களுக்கு இடையிலும் அதே போன்று தாய்மொழி பேசுபவர்கள், சிங்கப்பூருக்குப் புதிதாகக் குடியேறியவர்களுக்கு இடையிலுமான ஆற்றலியக்கத்தைப் பார்வையாளர்கள் கேள்வி கேட்க ஓர் இடத்தை வழங்குகிறது. இந்நாடகம் ஓவியத்தின் காட்சியை மீண்டும் உருவாக்குகிறது, 2008 ஆம் ஆண்டு மறு செய்கையில், ஓவியர்-கல்வியாளர் மற்றும் நாடகக் கலைஞரான நூர் எஃபெண்டி இப்ராஹிம் (Noor Effendy Ibrahim) மலாய் ஆசிரியராகவும், நடிகை இயோ யான் யான் (Yeo Yann Yann) மாணவராகவும் நடிக்கிறார்கள்.